**Series OSS**

**Code No. 6**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **6** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **8** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the student will read the question paper only and will not write any answer on the answer script during this period.

# TAMIL

# தமிழ்

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 100*

*கொடுக்கப்பட்ட நேரம் : 3 மணி* | *அதிக மதிப்பெண்கள் : 100*

## பகுதி அ

**1.** (அ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக : 5

(i) அழையை நெருங்கிய குழந்தையைத்தாய் அலைத்தாள்.

(ii) மலரின் மனம் என் மணதைக் கவர்ந்தது.

(iii) பெண்கள் கைத்தரிச் சேலைத் தறித்திருந்தனர்.

(iv) சீறோடும் சிரப்போடும் வாழ்க என வாழ்த்தினர்.


www.examrace.com

(v) நீண்டவலிப்பயணம் சென்றதால் கால் வழித்தது.

(vi) பெரிய பாரையைக் கடப்பாறையால் தகர்த்தனர்.

(vii) தணியாக அமர்ந்து கோபத்தைத் தனித்துக் தொண்டான்.

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய் இட்டு எழுதுக : 5

(i) சரஸ்வதி மஹால் நூலகம் ஒலை சுவடிகளின் பெட்டகமாக திகழ்கிறது.

(ii) எந்த பறவையும் தன் தேவைக்கு அதிகமாகச் சேர்த்து வைத்து கொள்வதில்லை.

(iii) சங்க கவிஞர்கள் இயற்கையை மிக நுட்பமாக தங்கள் கவிதையில் பதிவு செய்திருக்கிறார்கள்.

(iv) வாழ்வு காலத்தில் நன்மையை செய்.

(v) பள்ளி சிறுவர்கள் பள்ளி விட்டதும் துள்ளி குதித்தனர்.

(vi) மேகத்தை பார்த்து கொண்டிருப்பது மகிழ்ச்சி தரும்.

(vii) வாய்ப்புகளை உருவாக்குவதில் முந்தி கொண்டு அவ்வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்துங்கள்.

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு செய்க : 5

(i) இராமன் தேர்வுக்குப் படித்தான். (பிறவினையாக்குக)

(ii) நான் பாட்டைப் பாடினேன். (செயப்பாட்டு வினையாக்குக)

(iii) "கண்ணா பாட்டுப் பாடு" என்றான் முருகன். (அயற் கூற்றாக்குக)

(iv) என் ஆசிரியர் என்னிடம் தாம் மறுநாள் வருவதாகக் கூறிச் சென்றார். (நேர்க்கூற்றாக்குக)

(v) பருவ மழை நன்றாகப் பெய்தது, நாடு செழித்தது. (கலவை வாக்கியமாக்குக)


www.examrace.com

(vi) உயர்ந்த மலைகள் இருப்பதால் அடர்ந்த காடுகள் எங்கும் தென்படுகின்றன. (எதிர்மறையாக்குக)

(vii) நான் ஆசிரியரால் பாராட்டப்பட்டேன். (செய்வினையாக்குக)

(ஈ) பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்று** குறித்துக் கடிதம் எழுதுக. 10

உமது பகுதிக்குப் பேருந்து நிலையம் அமைத்துத் தரும்படி மாநகரப் போக்குவரத்துக் கழக ஆணையர்க்கு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

புதுமனை புகுவிழாவிற்கு உன் நண்பனை அழைத்துக் கடிதம் எழுதுக (எக்கடிதமாயினும் உமது முகவரி ப.தேவி/தேவன், 8, மூன்றாவது குறுக்குத்தெரு. சென்னை 18 எனக்கொள்க)

## பகுதி ஆ

**2.** கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக. 10

சமுதாயத்தில் சுறுசுறுப்பாகச் செயலாற்றும் பகுதி மாணவர் உலகமாகும். நாட்டின் உயிர்த்துடிப்பு. மனிதவாழ்க்கையின் முக்கிய அத்தியாயம் மாணவப் பருவம். "போர்க்களத்திலே வெடிப்பதற்குத் தயாராய் வாய் திறந்து நிற்கும் பீரங்கியின் வாயினுள்ளே புகழ் இருக்குமாயின் அதனை அடைந்திடத் துடிக்கும் பருவம்" என்பார் ஷேக்ஸ்பியர். தனக்கும் சமுதாயத்திற்கும் வேண்டிய அறிவு, ஆற்றல், சிந்தனை, ஒழுக்கம், பண்பு அத்தனையும் வளர்க்க வேண்டிய பொறுப்பு இப்பருவத்தினர்க்கே உரியது. நாட்டுக்கான கடமையும், பண்பும், தொண்டும் வீட்டில் தொடங்கி விரிந்து வளர்தல் வேண்டும். பெற்றோரையும் பெரியோரையும் மதித்து அன்பு


www.examrace.com

பாராட்டி அவர்களுக்குக கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இறைப்பற்று ஒழுக்கம், அன்பு, இனியவைகூறல், அடக்கமுடைமை, வாய்மை முதலிய உயர்பண்புகளைக் கொண்டவராய் வாழ வேண்டும்.

**வினாக்கள் :**

(i) மாணவப் பருவம் எத்தகையது ? *2*

(ii) மாணவர் பற்றி ஷேக்ஸ்பியர் கூறுவது யாது ? *2*

(iii) மாணவர்க்குள்ள பொறுப்பு யாது ? *2*

(iv) மாணவர் கொள்ள வேண்டிய உயர்பண்புகள் யாவை ? *2*

(v) இப்பத்திக் கேற்ற பொருத்தமான தலைப்பினைத் தருக. *2*

**அல்லது**

பன்றிக் காய்ச்சலைத்தடுக்க மேற்கொண்டிருக்கும் வழிமுறைகள் பற்றித் தமிழ்நாடு அரசு சுகாதாரத் துறைக் கண்காணிப்பாளரை நேர்காணல் செய்க.

## பகுதி இ

**3.** கீழ்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பில் **மூன்று** பக்க அளவில் கட்டுரை வரைக. *15*

(i) கிராம முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்

(ii) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

(iii) நான் விரும்பும் இலக்கியம்.

## இலக்கியம்

## பகுதி அ

**4.** கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடைதருக. *10×2=20*

(i) நீதி கூறும்போது நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.



www.examrace.com

(ii) பண்டைத்தமிழ் மக்கள் நனிநாகரிகராய் விளங்கியமையும் உயிர்க் குணங்களைப் போற்றி வாழ்ந்தமை பற்றியும் ஒரு கட்டுரை வரைக.

(iii) கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரை வடிவில் தருக.

(iv) தமிழ் - உயர்தனிச் செம்மொழி இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி ஆ

**5.** கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடைதருக : *5×2=10*

(i) வரத நஞ்சையப்பிள்ளை தமிழன்னையை எவ்விதம் வாழ்த்துகிறார் ?

(ii) 'பொறையுடைமை' - என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துகளைத்தொகுத்து எழுதுக.

(iii) சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை இருபது வரிகளில் எழுதுக.

(iv) பயனில்லாத முதுமையுடையாரை விளித்து நரி வெரூஉத்தலையார் கூறுவனவற்றை எழுதுக.

**6.** கீழ்வரும் செய்யுட்பகுதியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக : *5*

களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென் கொல் ?
தென்னவன் கொற்றம் சிதைந்தது இதுவென்கொல் ?

(i) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ? ஆசிரியர் யார் ? *2*

(ii) களையாத துன்பம் அடைந்த காரிகை யார் ? யாருடைய கூற்று ? *2*

(iii) இவ்வடிகள் அமைந்த காதை எது ? *1*

**அல்லது**

www.examrace.com

நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே

(i) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ? ஆசிரியர் யார் ? 2

(ii) யார் யாரிடம் கூறிதாக இவ்வடிகள் அமைந்துள்ளன ? 2

(iii) ஊர்மதி, வலவ பொருள் தருக. 1

## பகுதி இ

7. வேலி - இக்கதையின் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி வரைக. 10

அல்லது

மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து - கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

8. 'சட்டை' இக்கதையில் வரும் பூந்தோட்டச்சாமியின் பாத்திரப் படைப்பை ஆய்க. 5

அல்லது

பால்வண்ணம்பிள்ளை பாத்திரப் படைப்பை ஆய்க.


www.examrace.com